IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019)

C.C.No. 44/2007 P.W.8 Additional Witnesses

Name	:	திருமதி. தனலெட்சுமி (காவல் ஆய்வாளர்)	**Calling**	:	
Father's Name	:	க/பெ.	**Age**	:	
Village	:				
Taluk	:				

Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.08.2025.

அரசுத்தரப்பு முதல் விசாரணை :

1,4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நான் தற்பொழுது குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான திருமதி. சொரூப ராணி அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் சிகிட்சையில் இருந்து வருவதால் அவரால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலவில்லை. மேற்படி ஆய்வாளரின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் அவர்கள் முதல் விசாரணைச் செய்து மேல்விசாரணைக்கு 28.01.2007 ம் வருடம் வைக்கப்பட்டிருந்ததை ஆய்வாளர் அவர்கள் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை மறு விசாரணை செய்தபோது புதிய சங்கதிகள் எதுவும் சமர்ப்பிக்கப்படாத நிலையில் தனியாக வாக்குமூலம் எதுவும் அவர் பதிவுச் செய்யவில்லை. அதன் பிறகு 26.03.2007 ம் தேதி இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிட்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் திருமதி. வசந்தகுமாரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார்.

3. மேலும், 31.03.2007 ம் தேதி இந்த வழக்கில் புகார்தாரரும், 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரான சுதர் என்பவரும் பதிவு திருமணம் செய்து கொண்டது சம்மந்தமாக சான்று வழங்கிய சார்பதிவாளர் திருமதி. ஸ்ரீகலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். மேலும், வழக்குப் பதிவுச் செய்த உதவி ஆய்வாளர் திருமதி. கிளமன்சியாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளாா. இந்த வழக்கில் அனைத்து விசாரணையும் முடிந்த நிலையில் குற்றம் சுமத்தப்பட்ட

நபர்கள் மீது 498 எ, 325, 506 பத்தி ஒன்று உ/இ 34 இ.த.ச மற்றும் 4 வரதட்சணை தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை :

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.